Eelakesari Educational Supplement

வீலை சதம் 3

ஓம்

# ஈழகேசரி

(கல்வி அனுபந்தம்)

“கற்பவை கற்றுக் கற்றாங் கொழுக”

புத்தகம் 2 } சுன்னாகம்: பிரமாதி௵ வைகாசி௴ கசுஉ (28-5-39) { இல. 30

## ஆசிரியர்களே, உசார்!

சிக்கன சபையார் தமது தீர்மானத்தை எப்படியாவது நிறைவேற்றிவிட வேண்டுமென்று பிடிவாதமாக நிற்கிறார்கள். அதிலும் தலைவர் மிஸ்டர் குணத்திலகா, தான் பிடித்த முயலுக்கு மூன்று கால் தான் என்று க்ஷேத்திர கணித நூல்களிலிருந்துதானும் ஆதாரங்கள் காட்டித் தமது சித்தாந்தத்தை ஸ்தாபிக்க ஒருபோதும் பின்நிற்க மாட்டாரல்லவா? சிக்கன சபையாரின் முதலாவது திட்டம் ஆசிரியர் கண்டனங்களைப் பொறுக்கமாட்டாது சின்னாபின்னமாக உடைத்தெறியப்பட்டு வீசப்பட்டதென்று ஒருசில ஆசிரியர்கள் விளங்கியிருக்கிறார்கள் போல் தெரிகிறது! ஒருபோதும் நம்பவேண்டாம். பழைய புலி போய்விட்டதுதான். ஆனால் வேறொரு புலி பசுத்தோல் போர்த்திக்கொண்டு வருகிறது. இதை எதிர்க்க உங்கள் சாமர்த்தியம் போதாமலிருக்கலாம். ஆனால் கடைசிவரையும் கல்விக் கழகப் பழனங்களில் நுழைய விடாது காப்பாற்றும் பொறுப்பு உங்களைச் சார்ந்ததுதான்.

சிக்கன சபையாரும், கல்விச் செலவு சம்பந்தமாக நியமிக்கப்பெற்ற பிரத்தியேக உபசபையாரும் சேர்ந்து மலை கல்லி ஒரு சின்னச் சுண்டெலியைப் பிடித்திருக்கிறார்கள். ஆசிரியர்களுக்கு நாங்கள் ஒரு புதிய திட்டம் தருகிறோம்; இது இனிப்பாயிருக்கும் என்று சொல்லி ஒரு திட்டம் தயாரித்திருக்கிறார்களாம். இது விஷயம் வித்தியாசங்கமும் கல்விப்பகுதி நிர்வாகசபையாரும் ஏற்றுக்கொண்டுவிட்டார்களெனவும் அறிகின்றோம். (இந்தப் புதிய திட்டம் ‘ஈழகேசரி’யில் வேறோர் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கிறது).

எப்படியாவது இந்தத் திட்டம் கட்டாயம் நடைமுறைக்கு வந்தே தீருமென்று நம்பப்படுகிறது. அரசாங்கசபையில் விவாதத்துக்கு வரும்போது எதிர்ப்புக்களிருக்குமென்றாலும் குணதிலக்கா கோஷ்டி அங்கு சும்மாவா இருக்கப்போகிறது? எது விதமோ இந்தத் திட்டம் அரசாங்கசபையின் மூலம் நுழைந்து தேசாதிபதியின் அங்கீகாரமும் பெற்றுவிடுமென்றே நம்ப இடமுண்டு.

தமிழாசிரியருக்காகப் போயிருந்த ஸ்ரீ அமரசிங்கம் என்ன செய்தார்? அங்கே பேசப்பட்டவைகளுக்கு ‘ஆமா’ சொல்லித் தலையசைத்தது தான் மிச்சம். எச்செலவைக் குறைத்தாலும் கல்விக்காகச் செலவிடும் தொகையில் கைவைப்பதென்றால் நாட்டையே பாழ்படுத்த எடுக்கும் யோசனையல்லவா?

இலங்கையின் கல்விச் செலவு நாளுக்குநாள் வருடத்துக்கு வருடம் கங்கு கரையில்லாமல் ஏறி வருகிறதென்பது உண்மைதான். இதற்கு மூலகாரணங்களாயுள்ளவற்றை ஆராய்ந்து அனுவசியமாகத் தடையான வகைகளைக் கையாளுவது மிகவும் கேடு விளைக்கக்கூடியதாகும். அரசினர் செலவில் நடைபெறும் றோயல் கல்லூரியின் அவசியமென்ன, அவ்வளவு இன்றியமையாததா? மற்றும் கல்லூரிகளை விட இது என்ன பரமண்டலத்துக்கு ஏற வசதியளிக்கிறதா? இந்த ஒரு கலாசாலையாலேயே வருடாவருடம் ஒருதொகைப் பணம் அரசினர் வருவாயிலிருந்து தோண்டியெடுக்கப்படுகிறதே! இதற்கடுத்தாப்போல் தொழிற்கல்வியென்று பாசாங்குடன் வீற்றிருக்கும் சர்வ சாஸ்திர கலாசாலையால் கொஞ்சமா செலவாகிறது?

இனி, மேல் ஸ்தானங்களிலிருக்கும் கல்வி நிர்வாகத்தாரின் சம்பளங்களைப் பரிசீலனை செய்து அவைகளில் ஏற்ற விதம் வெட்டுக்கொத்துச் செய்தால் சாதாரண ஆசிரியர்களின் சம்பளங்களில் தாக்காது. அவர்களும் மனச் சந்தோஷத்துடன் உழைக்க ஏதுவுண்டல்லவா? இந்த யோசனை யொன்றுமில்லாது, கல்வி சம்பந்தமாக இம்மியளவுகூட அபிப்பிராயம் கூறத் தகுதியில்லாத ஒரு சிக்கனசபை புதிய திட்டங்களென்று ஆசிரியருக்கும் மாணவருக்கும், பொதுவாகத் தேசத்துக்கும், அமைத்துக் கொடுக்க எத்தனிப்பதென்றால், நாடு குட்டிச்சுவராகப் போவதற்கு என்ன தடை?

விண்டு மொழிதுளறி வேட்கைமது மொண்டுதருந், தொண்டியர்கள் கட்கடையிற் சுற்றுழிவ தெந்நாளோ.

# இளைஞரியக்கம்

“கல்வியிற் சிறந்தது தமிழ்நாடு; கலைகளிற் சிறந்தது தமிழ்நாடு; அறிவிற் சிறந்தது தமிழ்நாடு; ஆற்றலில் சிறந்தது தமிழ்நாடு” என்று எல்லாரும் புகழ்ந்து பாடுவதில் குறைவில்லை. ஆனால் தற்காலத் தமிழ்நாட்டின் நிலை வேறு விதமாயிருக்கிறது. “அறிவும் ஆற்றலும் அற்று அடிமையில் சிறந்தது தமிழ்நாடு” என்று கூறுதலே பொருந்தும்.

ஒரு நாட்டின் உயிர் நாடியாக விளங்குவது செல்வச் செழுமை. இதற்கு ஆதாரமாக இருப்பது ‘விவசாய—வர்த்தக—கைத்தொழிற் கல்விமுறை. இக்கல்விமுறை நம் நாட்டிற்கு உண்டா? இல்லை. இத்தாலியில் ஏழுவயதுச் சிறுவர்களும் யுத்தப்பயிற்சி பழகுகிறார்கள். இதிலிருந்து என்ன அறிகிறீர்கள் அவ் இளைஞர்களைப்பற்றி? அந்நாட்டவர்களைப்பற்றி? ஏழாம் பராயத்தில் அவர்கள் நாட்டுக்காக உயிர்த்தியாகம் ஆற்றுவதென்றால் அவ் இளைஞர்களின் உலக ஞானம் என்ன! அறிவு நலம் என்ன!! உடல்நலம் என்ன!!! மற்றும் பிறநலங்கள் என்ன! அவ் இளைஞர்களின் அறிவும் ஆற்றலும்தான் நம்நாட்டு எழுபது வயதுள்ள முதியவர்களின் அறிவு ஆற்றலுக்குச் சரியாகும்.

அமரிக்காவிலே எத்தனையோ லட்சரூபாக்கள் செலவழித்து இளைஞர் இயக்கத்தை ரூஸ்வெலட் ஆக்கி உள்ளார். காரணம் என்ன? முதியவர்களால் ஆகாதன இளைஞர்களால் ஆகும். முதியோர் தோல்வியடைந்து இனி என்னசெய்வது என்று எதிர்காலத்தில் நம்பிக்கையற்றிருந்த போதும் இளைஞர்களே முன்னே வந்து வெற்றிமாலை சூடுவார்களென்பதேயாகும். ஆ! நாகரிகம் வாய்ந்த பிரிட்டிஷ் ஆட்சியின் கீழிருந்தும் நாம் கல்வியிற் சிறந்தோமா? அறிவிற் சிறந்தோமா? ஆற்றலில் சிறந்தோமா? என்பதைச் சிந்திக்குமாறு நேயர்களை வேண்டுகின்றேன்.

வாசகர்களே! ஓர் சமுதாயம்—சமுகம்—நாடுமுன்னேற, இளைஞர்கூட்டுறவும் அவர்களுடைய ஒன்றுபட்ட தொண்டும் அவசியம் வேண்டும். அரசியல் விடுதலைக்கோ, சமூக முன்னேற்றத்திற்கோ, சமய அபிவிருத்திக்கோ, இன்னும் எத்தகைய தொண்டிற்கோ, இளைஞர்கள்தான் முன் வரவேண்டும். வயதில் முதியவர்கள் தளர்ச்சியுற்று இனி நம்மால் ஒன்றும்முடியாது என்று அயர்வுற்றிருக்கும் நேரத்தில் அவர்கள் ஆரம்பித்த வேலைகளை சித்திபெறச் செய்யவேண்டியது இளைஞரின் கடமையல்லவா? மேலும் முதியவர்கள் வாழ்நாளில் பல துன்பங்களில் ஈடுபட்டு வாடி, வதங்கிச் சோர்வடைந்திருப்பது இயற்கை. அவர்களுக்கு இளைஞர்களுக்கு இருக்கக் கூடிய ஆத்திரம்—உணர்ச்சி, என்பன கிடையா. அவர்கள் கட்டுப்பாடும் இருக்காது. ஆனால் இளைஞர்களோ எப்போதும் முன்னேற வேண்டும் என்ற அவாவே கொண்டிருப்பார்கள். அவர்கள் ஒரு காரியத்தில் ஈடுபட்டால் அதன் கரைகாணும்வரையும் வேறொன்றிலும் பிரவேசிக்கமாட்டார்கள். அவர்களிடம் கட்டுப்பாட்டைப் புகுத்துவது எளிது. ஆகவே இளைஞர்களால் முடியாதது ஒன்றுமில்லை. அவர்களை ஆரம்பத்திலேயே மனோதைரியமுடையவர்களாயிருக்கச் செய்யவேண்டியது முதியவர்களின் கடமையாகும். ஆழி கரை புரண்டாலும் வானமிடிந்தாலும் மனோதைரியத்தை யிழக்காத இளைஞர்களே வேண்டும். முதியவர்கள் இளைஞர்களை உற்சாகப்படுத்தி, கல்வி புகட்டி, நல்லொழுக்கம் உடையவர்களாய்ச் செய்து அறிவாளிகளாய் விளங்குமாறு தூண்டவேண்டும். இதற்கு இற்றைய யாழ்நகர் வாசிகளில் சுதந்திரத்திற்காக —நாடுமுன்னேற்றத்திற்காக பாடுபடுபவர்களுள் இவ்வித முறையை ஸ்தாபித்தது நம் ‘தாத்தா’வாகும். அவரே உண்மையை உணர்ந்த வீரர். இவரே “இளமையிற் கல்வி சிலையில் எழுத்து,” “தொட்டிலிற் பழக்கம் சுடுகாடுமட்டும்” என்பதை உணர்ந்தவர். மற்றும், இளைஞர்கள் நாட்டிற்கோ, சமுகத்திற்கோ, பயனுடையவர்களாய் அல்லது பயனற்றவர்களாய் விளங்குவதற்கு முதியவர்களே பொறுப்பாளிகளாவர் என்பதையும் அறிந்த பேரறிஞர். ஆ! தாத்தாவின் தகைமையை என்னென்று எடுத்து இயம்புவது என்று எண்ணுகின்றேன். எண்ணி ஒன்றும் சொல்லமுடியாது என்றே முடிபு வந்தேன்.

நிற்க, இளைஞர்களை கிணற்றுத்தவளை போலும் குடத்திற்குள் வைத்த விளக்குகள் போன்று வீட்டுக்குள் அடைத்து வைக்காமல் கல்வி புகட்டி; அறிவு விசாலிக்கும்படி செய்து, பரந்த நோக்கமும் சுயநலமற்ற சிந்தை அவர்கள்பால் நிலைநிற்குமாறு முதியவர்கள் முயலவேண்டும். இளைஞர்களே! நம் தமிழ்நாட்டில் நம் நிலைமை என்ன? சமய நிலையென்ன? நம் அரசியல் நிலைமையென்ன? சமூகநிலைமையென்ன? என்பதை உணருங்கள். ஐர்லாந்தென்ன? துருக்கியென்ன? எகிப்தென்ன? சீனாவென்ன? இந்நாடுகளெல்லாம் இன்று உரிமை பெற்றோ அல்லது உரிமை பெறவோ முன் வருவது அந்நாடுகளின் இளைஞர்களல்லவா காரணம்?

ஆதலால் இளைஞர்களே! நாட்டின் நலம் கருதி எக்காரியத்தினும் சரி நாங்கள் பேராத்திரமும் பேருணர்ச்சியும் போற்றுந் திறமுடையவர்கள் என்று தாத்தாவுக்குக் கூறுங்கள். ‘முடியாது’ என்ற பதம் இளைஞர்களுடைய அகராதியில் இல்லையென்று அறிவுறுத்துங்கள். நாங்கள் இளஞ்சிங்கவேறுகள் என நினையுங்கள். என்று தாத்தாவை தேற்றுங்கள.

வருங்காலத்தில் நமது நாட்டினைப்போற்றுதற்குரிய நன்மக்களாக வரவேண்டியவர்கள் இளைஞர்களேயாவார்கள். வருங்காலத்து மிளிர்ந்து நாட்டினை அழகு செய்ய வேண்டிய வீரர்களும், புலவர்களும் ஞானிகளும் இவர்களிலேயே இருக்கின்றார்கள். எனவே நாட்டின் வருங்கால நிலை இவர்கள் நிலையைப் பொறுத்தே முடிவு செய்யப்பட வேண்டியதாகும். இதுபோழ்து ‘ஈழகேசரி’ இளைஞர்சங்கம் எவ்வளவு தூரம் உரம்பெற்றிருக்கின்றதோ, அவ்வளவே நாட்டின் நன்மைகள் திகழ்தல் கூடும். ஆதலின் இச் சங்கம் வாழ்க! இச்சங்க இளைஞர் வாழ்க!! நம் தாத்தா நானிலம் புகழ்பெற்று நலமுடன் வாழ்க! வாழ்க!!

நா. சிவபாதசுந்தரம், தொல்புரம்

மெய்யிற் சிவம்பிறக்க மேவுப் இன்பம் போலமாதர், பொய்யிலின்பின் றென்று பொருந்தாநாள் எந்நாளோ.

# பாலர் தோட்டமும் பயிற்சி ஆசிரியரும்

[புலோலி வித்துவான், திரு. க. முருகேசபிள்ளை
தமிழாசிரியன்]

பாலர் தோட்டம் என்னும் பாலர் பயிற்சிக் கழகம் பாலரின் மாண்பை நன்கு வளர்த்துப் பண்படுத்துமென்பது துணிந்த காரியமுமாகும். இப்பாலர் கல்விமுறை சில நூற்றாண்டின் முன்பு மேலைத்தேசத்தில் ஆரம்பமாகி சுமார் நாற்பது ஆண்டுகளின்முன்பு இலங்கைத் தலைநகருக்கு வந்தது. பின்பு படிப்படியாக எல்லா இடங்களிலும் இடம்பெற்றது. பாலர் தோட்டம் என்பது ஓர் பாடமன்று, ஓர் பயிற்சி முறையாகும். பிள்ளைகள் மிகவும் சந்தோஷத்துடனும், ஊக்கத்துடனும் வளரவேண்டுமென்பதே இவ்விஷயத்தை அடியிட்டு வளர்த்தவர்களின் நினைவாகும். குழந்தைகளினுடைய பிற்கால வாழ்க்கை முழுவதும் அவர்களுடைய விளையாட்டுக்களிலேயே பூரணமாகப் பிரகாசிப்பதைப் "பிறெடிக்புறோபெல்" என்பவர் நேரில் கண்டறிந்தார். "வாழும் பிள்ளையை மண் விளையாட்டிலே தெரியும்" என்பது நம் நாட்டுப் பழமொழி. குழந்தைகளின் பிற்கால அபிவிருத்திகளெல்லாம் ஓர் விதைக்குள் மரம் அடங்கி இருப்பதுபோலக் குழந்தைகளின் விளையாட்டில் அடங்கி இருப்பதைக் கண்டார்; மேலைத்தேசத்தில் நான்குவயது முதல் பயிற்றப்படுவர்; ஐரோப்பாவில் அரசினர் மிகவும் கவனம் செலுத்துகிறார்கள்.

பாலர் தோட்டம் அமைந்திருக்கும் இடம் மிகவும் சிறந்த இடமாக இருக்கவேண்டும். சுடலைப்பக்கமும், சதுப்பு நிலமும், சந்தைச் சந்தடி இடமும், அளவுக்கு மிஞ்சிய சனநெருக்கமான இடமும் கூடாவாம். காற்றோட்டமும், பிள்ளைகளின் வசதிக்கேற்ற அண்மையும் நலம். சுகாதார வசதிகள் பொருந்திய இடமே ஏற்றதாகும். கட்டிடம் வகுப்பறை, போசன அறை, சயன அறை, குளிப்பறை யாதியன அமைந்திருக்கவேண்டும். கிணறு, மிருகவளர்ப்புச்சாலை, விளையாட்டு நிலையம், புறா முதலாம் பட்சிகள் வளர்ப்பிடம், வைத்தியசாலை, பிரதம சிகிச்சை அறை ஆதியன முறைப்படி அமைய வேண்டும். ஆசனங்கள் பிள்ளைகள் இலகுவில் எடுத்து வைக்கவும் நிமிர்ந்திருக்கவும்கூடியதாக இருக்கவேண்டும். ஒரு பிள்ளைக்குப் பத்துச்சதுர அடி இருக்கவேண்டும். மலசல கூடம் தனித்தனி இருத்தல் நலம். பலவித புஷ்பக்கொடி செடி அமைந்த பூந்தோட்டம் வேம்பு மகோகினி யாதியாம் நல்நிழல் மரங்கள் அமைந்திருக்க வேண்டும். சில தருணங்களில் வகுப்பு மரநிழலிலும் வைத்து நடத்தலாம். பாலர்களுக்குச் சிரமப்பயிற்சி, விளையாட்டு, சங்கீதம், அபிநயப்பாட்டு, வரைதல், வண்ணம் தீட்டல், கைவேலை, காகிதம் மடித்தல், வெட்டல், காகிதப்பாய் பின்னல், பூவெடுத்து மாலைசரமாதியன கட்டல், கதை கேட்டல், கதை சொல்லல், நடித்தல் ஆதியவற்றில் வெகு விருப்பம் உண்டு. இயற்கைப் பொருள்களுக்குரிய சிறந்த பொருள்கள் வைத்திருத்தல் வேண்டும்.

குழந்தைகளுக்குப் பிராணிகளிடத்தில் வெகுவிருப்பம் உண்டு. புத்தியான ஆசிரியர் இயற்கை வர்க்கப் பொருள்களையே தேடிக் குழந்தைகளைச் சுற்றி வைக்க முயல்வர். குழந்தைகள் விரும்பும் புறா, குழிமுயல், ஆட்டுச்குட்டி, மாட்டுக்கன்று, கோழி, மீன் ஆதியவற்றைப் பள்ளிக்கூடங்களிலும் பிரதான பொது இடங்களிலும் வளர்க்கலாம். சிறு பருவத்தில் ஒன்றைப்பார்ப்பதைவிட ஒன்றைச் செய்வதிலேயே மிகு விருப்பம். பிராணிகளுக்குத் தீனி கொடுத்தல், தண்ணீர் வார்த்தல், புல் மேய்த்தல் விருப்பமாய் நடத்தல் ஆதியாங் கருமங்களுக்கு மாணவரை விடவேண்டும். பிராணி ரக்ஷணம் மனுஷனை இரக்க சுபாபமாக்கவல்லது. குழந்தைகள் இஷ்டமான பிராணிகளுக்குத் தீனிபோட்டுப் பாதுகாக்கவிடுவது பிராணிகளிடத்துப் பிரீதியும், கௌரவமும் உண்டாக்கச் சிறந்த மார்க்கமாகும். குழந்தைகளின் இரைச்சல் நிறைந்த இடத்தும் புறா முட்டை இட்டுக் குஞ்சுபொரிக்கும்.

சில வித்தியாசாலைகளில் அப்படி வளர்த்தல் முடியாத காரியம். கிழமைக்கு ஒருதினமோ அன்றி மாதத் திருநாளோ அப்படிப் பிராணி வர்க்கங்களைக்கொண்டு வரச் செய்து எல்லாரும் சேர்ந்து தீனிபோட்டும் அவற்றோடு சேர்ந்து விளையாடியும் வெகு சந்தோஷமாகக் காலங் கழிக்கலாம்.

சூரியன், சந்திரன், வானவில், மழை, சாயை, சூரியசந்திரோதயாஸ்தமனங்கள், பல்வேறு வகையான செடிகொடி மரங்கள், இதர தோற்றங்கள், கடல் சார்ந்த இடங்கள் ஆகியவற்றை அவதானிக்கும்படி விடவேண்டும். அப்படி உற்சாகப்படுத்துவது குழந்தைகளின் இயற்கை வல்லபங்களை வளர்ப்பதாகும். இதனால் உண்டான ஆச்சரியம் பெருமை தங்கியதும் அழகுவாய்ந்ததும் ஆன அற்புத உலகைப் பிற்காலத்தில் ஆழ்ந்தறியவும் அனுபவிக்கவும் எல்லாம் படைத்த எல்லாம் வல்ல கடவுளிடத்தில் பக்தி செலுத்தவும் ஓர் உபாயமாகலாம்.

பாலரைப் பயிற்றுவதற்கேற்ற பாலர் தோட்டத்தைச் செவ்வனே நடத்தல் வேண்டும். நம் யாழ்ப்பாணத்திலே பாலர் தோட்டம் பேரளவில் இருக்கிறதே யன்றிச் செயலளவில் திருப்திகரமுடையதென்று சொல்லுவதற்கு இடமில்லை. சிலர் அதிகாரிகளைத் திருப்தி செய்யும் நோக்கமாகவே இருக்கின்றனர். பாலர் தோட்டம் பாலர் அறிவை மென்மேலும் வளர்த்துவிடுகிறது. உலகில் பிறந்தவர் யாவரும் அறிவை விருத்தி செய்வதே நோக்கமாக உடையர். அறிவு விருத்தி பலதிறனுடும். பாலர் அறிவு விருத்தி நன்மார்க்கத்திலேயே இருக்க வேண்டும். மேலைத் தேசப் பாலர் தோட்டத்தில் பயிற்சி பெற்ற பிள்ளைகளுக்கும் நம் நாட்டுக் குழந்தைகளுக்கும் அறிவு விருத்தி வகையில் வெகு வேற்றுமை காண்கிறோம்.

(தொடரும்)

ஐம்பூதத் தாலே அலக்கழிந்த தோஷமற, வெம்பூத நாதனருள் எய்துநாள் எந்நாளோ.

# நாட்டுப்புறத்தில் தோட்டக்காரன்

(சி. சிவானந்தம், ச. எண் 202, மகாதேவவித்தியாசாலை)

['ஈழகேசரி' இளைஞர்சங்க மகாநாட்டுப் பேச்சுப்போட்டியில் முதற் பரிசு பெற்றது]

"அம்மா பசிக்கிறது, சோறுதா" என்றான் மூத்த பையன். பையனுடைய பசியும் அம்மாவுக்குத் தெரியும்தானே.

"சோச்சி பாய்ச்சுது ஏக்கும் தா", என்றான் இளைய குழந்தை. குழந்தையினுடைய பசியும் அவளுக்குத் தெரியும்தானே!

முதற்பையன் எழுத்துப்பிழை, சொற்பிழை விடவில்லை. இரண்டாவது பையன் சொன்னது முழுவதும் பிழை. ஆயினும் மழலைச்சொல் லல்லவா? இருவருக்கும் உணவு அகப்பட்டது. அதுபோலவே முதற் பையன் போன்றவர்கள், முன்பேசியவர்கள். இரண்டாவது போன்றவன் யான். இரு வகுப்பாருக்கும் பேச இடங் கொடுத்திருக்கிறார் 'தாத்தா". அவருக்கு எனது அன்பார்ந்த வந்தனம். உரித்தாகுக.

## முகவுரை

எனதன்பிற்குரிய சகோதர சகோதரிகளே! விடயத்தைப் பார்த்தவுடன் ஆசாமி சரியான பட்டிக்காட்டானென்றல்லவா நினைக்கிறீர்கள். ஆனால் அது உண்மையுமல்ல, பொய்யுமல்ல. நான் இருப்பது நாட்டுப்புறம்தான். ஆனால் 'குளம் தேய்ந்து குட்டையானாற்போல' எமது நாடு நவ நாகரீகம் கண்டுதேர்ந்த நாடு. விடிய எழும்பி வெளியே போனால், பனியில் நனைந்து பாடுபட்டுத் துலா மிதிக்கும் பல பேர்வழிகளைக் காண்பேன். பல் கூடத் துலக்காமல் பற்றவைத்த சிகறெற்றுடன் திரியும் வாலிபரையும் காண்பேன். இரு வகுப்பாரைப்பற்றியும் நோக்கிச் சிந்திப்பேன். தோட்டக்காரரைப்பற்றித் தோன்றியதே யான் கூறப்போவது.

## நம் தேசத்து நாட்டுப்புறங்கள்

நம் தேசம் இலங்கை. அதனுள் நாம் இருப்பது யாழ்ப்பாணம். யாழ்ப்பாணத்திலோ என்றால் ஆறுகள் கிடையாது. "ஆறில்லாவூருக்கு அழகுபாழ்" என்பது உண்மைதான். ஆயினும, இடும்பைகூர் வயிற்றோடு வாழவேண்டி மனிதர் முயற்சியால் திருத்தப்பட்டுச் சில கிராமங்கள் இருக்கின்றன. வயல்வெளிகளும், தோட்டங்களும் நடுவில் கோவிலும், அதனைச் சூழக் குடிமனைகளும், அயலிலே பாடசாலைகளும் அழகுற அமைந்து அழகாகவும் அமைதியாகவும் சில நாட்டுப்புறங்கள் இருக்கின்றன. அவற்றுள் இடையிடையே அரசாங்கத்தார் போட்ட தெருக்களும், அவற்றினின்றும் பிரிந்து செல்லும் கிராமசங்கத்தார் போட்ட மண் ஒழுங்கைகளும் அழகாக அமைந்திருக்கும்.

நாட்டுப்புறத்தில் ஓர் பாடசாலை. அதில் சிறுவரும் சிறுமிகளும் படிப்பார்கள். படித்தல் என்ற பொழுதுபோக்கு நடைபெறும். அங்கே படித்தன முழுவதும் தவளையும், பூவும், தசமமும் முதலியனவாம்! படிப்பு முடிந்ததும், வேலையில்லாத் திண்டாட்டமே. வேறு வேலை செய்ய ஒருவராலும் முடியாது. தேக ஸ்திதியைக் கவனிப்பதில்லை. தினமும் பாடசாலைக்குச் சென்று உருப்போடுவதே அவர்கள் வேலை.

## தோட்டக்காரரின் தொழில்

இடுப்பில் ஒரு வேட்டி. தலையில் ஒரு துண்டு. தேகமெங்கும் முயற்சியின் சின்னம். முகத்தில் ஒருவித களை. சாந்தமயம். இப்படிப்பட்ட ஒருவனை நாட்டுப்புறத்தில் கண்டவுடன் ஆசாமி தோட்டக்காரனென்றே கூறுவீர்கள். எவ்வளவு பனியால் நனைந்த அந்தச் சரீரம். எவ்வளவு வெயிலால் உலர்ந்தது அந்தத் தேகம். எவ்வளவு பசியால் அலைந்தது அந்த உடம்பு. ஏன் இவ்வளவு கஷ்டம்? ஆடிக்கொண்டிருக்கும் சாய்வு கதிரையில் மின்சார விசிறிக்கு முன்னிலையில் மூன்றோ, நான்கோ, ஐந்தோதரம் சாப்பிட்டுவிட்டு மேசையில் எழுத்துவேலை பார்க்க அவனுக்குத் தெரியாதா? என்று சிலர் கேட்கக்கூடும். பிறனுக்கு அடிமைப்பட்டு, அவன் கீழே இருந்து, கைகட்டி, வாய்பொத்தி, சப்பாத்துத் துடைத்து நின்று செய்யும் வேலை அவனுக்குத் தெரியாது! அவன் "உழவே தலை" என்று முன்னோர் செய்ததையே கைக்கொண்டு இருக்கின்றான். இது என்னுடைய நிலம்; இது என்னுடைய உணவு; இது நான் செய்த குரக்கன் என்று தன்னுடையதென்று பெருமையாகச் சிவிப்பதையே கைக்கொண்டு இருக்கின், இந்தச் சந்தோஷத்தின்முன் அவன் பனி, வெயில் என்பவற்றினால் உண்டாய துன்பங்களை மறந்துவிடுகிறான்.

## தோட்டக்காரனின் குடும்பமும் குதூகலமும்

ஒருவன் தோட்டத்தில் புகையிலைக்கன்று வெட்டும் பருவம். விடிய நாலுமணிக்கு எழும்பிவிடுகிறான். விடியும்வரை தோட்டத்தில் இறைக்கிறான். விடிந்தவுடன் மனைவி எழுந்து கஞ்சியோ, கூழோ கொண்டு செல்கின்றாள். அவனுக்குக் கிணற்றடியில் சாப்பாடு. அதனால் பெருமகிழ்ச்சி. அவன் செய்த குரக்கனையோ அல்லது சாமியையோ ஆக்கிக் கொடுப்பதே அவள்வேலை. அவளுக்குப் பத்திரிகை வாசிக்கவோ, அல்லது பலருடன் சங்கம்கூடவோ நேரமில்லை. அவனுக்கு ஒத்தாசை செய்வதே அவளுடைய பிரதான நோக்கம். அவனுடைய சுக துக்கமிரண்டிலும் இவளுக்கு அரைவசி உடையது. வலக்கண் ஒரு பொருளையும், இடக்கண் வேறொரு பொருளையும் பார்க்கமுடியுமா? "கண்ணிரண்டும் ஒன்றையே காண்" என்றார் பெரியோர். காண்பதில் தோட்டக்காரன் மனைவி களைப்பதில்லை. அவளுக்குப் பிள்ளைகள் தொல்லை ஒருபுறம். கட்டாயப் படிப்புச் செலவு ஒருபுறம். அவர்களின் உணவுத்தொல்லை ஒருபுறம். கணவனின் தோட்ட முயற்சி ஒருபுறம். கோவில் குளம் கட்டச் செலவு ஒருபுறம். இவ்வளவிற்கும் ஈடுகொடுப்

'சித்தமுத லாம்புலனிற் சஞ்சரித்த கள்வரேனும், பித்தர்பயந் தீர்ந்து பிழைக்குநாள் எந்நாளோ.

பவள் அவளே. இவற்றைவிட அவளின் சந்தோஷத்தை நாட்டுப்புறத்தைவிட வேறொரு இடமும் பார்க்கமுடியாது. "இல்லாள் அகத்திருக்க இல்லாததொன்றில்லை இல்லாளும் இல்லாளே யாமாயில்" என்பது உண்மைதான். நாட்டுப்புறத்தில் வந்து பாருங்கள்: காலை எட்டு மணிக்கு அவர்கள் பிள்ளைகள் ஏதாவது சாப்பிட்டுவிட்டு பாடசாலைக்குப் போவார்கள். பாடசாலையைப்பற்றி முன்னமே கூறிவிட்டேன். ஒன்றுகூற மறந்துவிட்டேன். என்ன? என்ன? மத்தியான போசனம்! தோட்டக்காரப் பிள்ளைகட்குச் சோறு போடுகிறார்களாம். புண்ணியவான்கள் என்று நினைக்க, கடையில் உழுத்த கட்டரிசியும், உழுத்த அல்லது அழுகிய ஒரு பருப்போ அல்லது, கரட்டை வாழைக்காயோ அவர்கட்குச் சாப்பாடு! மாலையில் ஆடுமாடு கட்டப் பிள்ளைகள் உதவி செய்வார்கள். அதனால் தோட்டக்காரருக்கு வெகு புழுகு. ஏனென்றால் தங்கள் பிள்ளைகளல்லவா?

## பரஸ்பர ஒற்றுமை

ஒருவனுக்கு ஆபிரங்கன்றில் சாமையோ அல்லது குரக்கனோ செய்தால்தான் அவனுக்கு ஆறுமாதத்திற்குச் சாப்பாடு கிடைக்கும். கிணறோ இருபதுமுழ ஆழம் தனித்து இறைக்கமுடியாது. இதனால் நாட்டுப்புறத்தில் ஒற்றுமை அதிகம். நாலுபேர் சேர்ந்து நாலு தோட்டம் செய்வார்கள். ஒருவனுக்கு ஞாயிற்றுக்கிழமை காலை என்றால் மற்றவனுக்கு ஞாயிற்றுக்கிழமை மாலை என்றும், மற்றவனுக்குத் திங்கட்கிழமை காலை என்றும் இன்னொருவனுக்குத் திங்கட்கிழமை மாலை என்றும் வேலை செய்வார்கள். அவர்கள் முறை தவறாது வேலை செய்வதில் கை தேர்ந்தவர்கள். அவர்கள் ஒத்தாசை செய்வதில் மிகச் சிறந்தவர். அவர்கள் ஒத்தாசைக்குப்பதில் ஒத்தாசையே மற்றவர்கள் செய்வார்கள். சம்பளம் பெறுவதில்லை., குரக்கன் அறுப்பு, சாமிவெட்டு இவைகளுக்கு அவர்கள் ஒத்தாசை செய்வார்கள். சரீர முயற்சியில் மாத்திரம் அல்ல, அவன் கலப்பை, நுகம், தடி, பாய், சுளகு, மண்வெட்டி துவக்கம் ஒருவர்க்கொருவர் உதவுவார்கள். தான் இன்புறுவதைப்போல் மற்றவனும் இன்புறவேண்டும் என்று அவாவி நிற்பவன் தோட்டக்காரனேயாகும்.

## அரசாங்கசபையில் அவன் அறிவு

ஏதும் தெரியாதுவிட்டால் அவன் நாட்டுப்புறத்தான் என்று கூறுவது வழக்கமாய்விட்டது. ஆனால் அது சரியோ பிழையோ என்பது அவர்கட்குத் தெரியாது. கிராமசங்கத்தெரிவு அவர்கள் செய்யும் வேலை. அவனுக்கு இப்போ சுமாராய்த்தெரியும். அடுப்பு எரிக்கும் பெண்களுக்குக்கூட அவை சுமாராய்த்தெரியும். ஆனால் அவன் தன்பட்டினி, உணவு உடை, தொழில் என்பவற்றைப்பற்றிச் சிந்திக்கின்றான். தனக்கு உணவு, உடை இவைகளால் வரும் என்று எப்போதாவது எண்ணுவது கிடையாது. அரசாங்கசபையில் நூற்றுக்கு ஐம்பது வீதம் சிங்களவரும் தமிழரும் இருந்தாலும் அவனுக்கு அக்கறையில்லை. அபேட்சர்கள் அது செய்வோம் இது செய்வோம் என்று சொல்லிக் கேட்டுப்புளித்துப்போய்விட்டது. போனமுறைவிற்ற புகையிலைப்பணந்தான் இம்முறையும். யார் போயென்ன விட்டென்ன என்று நினைக்கின்றான். அவன் புகையிரதஸ்தானம், தபாற்கந்தோர் முதலியன தனக்காகவே வைத்திருக்கிறார்கள் என்பதையும், தன்னுடைய பணந்தானென்பதையும் உணர்வதில்லை. அவற்றின் அதிகாரிகளும் அப்படி நடப்பதில்லை. யார்மேல் பிழை என்பது உங்கள் யாவர்க்கும் இனிது விளங்கும்.

## நல்லமரத்திற் சில புல்லுருவிகள்:

மரம் நல்ல மரந்தான். ஆனால் புல்லுருவிகள் பிடித்துவிட்டால் மரத்தின் உணவுகளை உண்டுவிடும். அதுபோலவே நாட்டுப்புறத்தில், நல்ல சிவியந்தான் ஆனால் அனேக, புல்லுருவிகள் பிடித்துவிட்டன. நாட்டுப்புறத்தை முதல் கெடுப்பன குடிவகைகள். அநேக தூரம் நடந்து குடித்தவனுக்கு இப்போ ஒரு மரவரி. பாலும் மோரும் குடித்தவனுக்கு தேயிலையும் காப்பியுமாக வந்துவிட்டது. நாட்டுப்புறத்தில் "ஆன முதலில் அதிகம் செலவு செய்தல்" அதிகம். எந்த வறியவனும் செல்வனைப்போல இடம்பமாகச் செலவு செய்யவே விரும்புகின்றான்.

## இளைஞர்க்கு வேண்டுகோள்:

மனித சரீரத்திற்குச் சுத்த இரத்தம் அவசியம். அது இல்லையேல் உடம்பு பாழ்படும். சுவாச அறைகள் அவற்றிற்குத்துணை. நாட்டின் சுவாச அறைகள் கிராமங்கள், நாட்டுப்புறங்கள்தான். அவைகள் பாழ்படின் நாடு பாழடையும். நாடு பாழடையவே பஞ்சம் பசி, பட்டினி, வேலை இல்லாத்திண்டாட்டம் என்ற கூக்குரல் நாலாபக்கமும் எழும். இதனால், வஞ்சனை, பொறாமை முதலிய துர்க்குணங்கள் தன்னை அறியாமலே உண்டாகும். ஆகவே முக்கியதொண்டு நாட்டுப்புறங்களைச் சீர்திருத்துவதே. தயங்காது அவ்வேலையில் முன் வருவீர்களாகுக.

---

(240-ம் பக்கத் தொடர்ச்சி)

வஷர் என்னை இன்னாரென அடையாளந் தெரிந்துகொள்ளவில்லை. உம்மேல் நான், மிகவும் அனுதாபப்படுகின்றேன். கூடிய விரைவில் நீர் நன்றாகக் கற்றுப் பெரிய மனிதராவீர் என நம்புகின்றேன். தாத்தா உமக்கு வேண்டும்போது உதவி புரியத் தயார்.

ச. வரதராசன்—என்ன, 'எழுத்துப் போட்டியில் இரண்டாம்' பரிசாம்? புழுகமாயில்லையா? நீர் எழுதியதற்கெல்லாம் விடை பகர்வதென்றால் பெரிய சிரமம். கட்டுரைகள் நீர் சொன்ன வண்ணம் தான் தெரிவு செய்யப்பெற்றன. பேச்சுப் போட்டியில் நாம்நினைத்தபடியும், பொதுமக்கள் நினைத்தபடியுமே மத்தியஸ்தர் தீர்மானித்ததுமிகவும் நல்லதாய்ப்போயிற்று.

அ. இந்திராவதி—தங்கச்சி, உமது கடிதம் என்னை வந்தடைந்த அன்றோ அதற்கு முதல் நாளோ உமது கையில் 'கல்வி மலர்' வந்து கிடைத்திருக்குமே! சனிக்கிழமை எங்கள் வருடாந்தக் கூட்டம்; அடுத்த நாள் ஞாயிற்றுக்கிழமை கந்தோர் வேலையில்லை, ஆகையால் திங்கள் அல்லது செவ்வாயில் தான் எங்கள் கிளாக் உமது மலரை அனுப்பியிருக்கக் கூடும். கிடைக்காவிடின் எனக்குத் தெரிவிக்கவும்.

புதிய அங்கத்தவர் (மூற்றொடர்)

259. சி. நடராசா, 260. வே. சின்னையா, 261. வா. சர்வேஸ்வரசர்மா, 262. வ நடராசா, 263. க. சின்னத்துரை.

---

## மதுவால் வரும் மோசம்

காமாக்ஷிப் பாட்டியின் மகன் ராமு பொல்லாத குடிகாரப் பயல். வறிய குடும்பத்திற்றான் பிறந்தவன். ஆனாலும் அவன் சிறுவயசிலேயே தீயவர்களுடன் சேர்ந்து தீய குணங்களைப் பழகிக் கொண்டான். இவன் ஆகக் குறைந்தது ஒருநாளைக்கு மூன்று முறையாவது குடிப்பான். அதிகம் சொல்வானேன்? இவன் இப்படிக்குடித்து வந்ததால் அவன் வீட்டில் வறுமையும் வர வர அதிகரிக்கத் தொடங்கியது. இப்போது அவன் கையில் ஒரு சல்லி காசு கூடக்கிடையாது. என்ன செய்வான்? குடிக்காமலே விட்டு விடுவதென்றால் அவன் மனம் கேட்குமா? இல்லை. பிறகு சிறிது நாட்கள் வரை களவெடுத்துக் குடித்துவந்தான். 'என்னைப் பிடித்தாலும்' என்றபயம் அவனைவாட்டிற்று. ஆனால் அவன் வரவர திருட்டுத்தொழிலில் கைதேர்ந்த நிபுணனாய் விளங்கினான்.

ஒருநாள் இரவு விண்ணின் நின்று தங்கக் கம்பிகளைச் சந்திரன் சொரிந்துகொண்டிருந்தான். இவ்வேளையில் ராமு அடுத்தவீட்டுத் தனவந்தர் வீட்டில் சில பொருட்களையும் பணங்களையுந் திருடிக்கொண்டு வீட்டிற்கு வந்தான். இவன் வந்த அரவங்கேட்டுத் தூக்கத்திலிருந்த பாட்டி விழித்துக்கொண்டாள். இவன் தான் பிடிபடாமல் அதிக பணங்களையும் பொருட்களையும் திருடிவிட்டேன் என்ற ஆனந்தத்தினால் தூக்கத்திலிருந்து விழித்துக்கொண்ட பாட்டியையும் கவனிக்காமல் திருடின பொருள்களைக் கணக்கிட்டுப் பார்த்தான். விழித்துக்கொண்ட பாட்டி உடனே, "தம்பி! ஏதெடா உனக்கு இவ்வளவு பணமும் பொருளும்?" ராமு, "நான் பாட்டீ.........அது...........அங்கை எடுத்தேன்" என்றான். "எங்கேடா எடுத்தே" என்று அதட்டினாள் பாட்டி. "ஒருவருக்கும் சொல்லிவிடாதே பாட்டீ! அடுத்தவீட்டுத் தனவந்தர்வீட்டில்எடுத்"...என்றான். "பொலிஸ்பிடிச்சுக்கிட்டா அப்புறம்என்னசெய்யறது? அவங்கபிடிச்சா நான்எடுக்கேலை என்று சொல்லுறதுதான்! அவங்க என்ன செய்ய முடியும்?"என்றுசொல்லிவிட்டுப் படுக்கைக்குச்சென்றான்.

மறுநாட் காலை சூரியன் தனது செங்கரங்களைப் பரப்பிக்கொண்டு குணதிசையில் உதித்தான். பட்சிசாலங்கள் தங்கட்கும் தங்கள் குஞ்சுகளுக்கும் ஆகாரந்தேடும் நிமித்தம் ஆகாயவெளியிற் பறந்து திரிந்தன. தடாகங்களில் தாமரைகள் தங்கள் நாயகன் வருகிறான் என்று முகமலர்ச்சியோடு இருக்கின்றன. அந்நேரத்தில் இரு பொலிஸ்மார் ராமுவைப் பிடித்துக் "கொற கொற" வென்று இழுத்துக்கொண்டுபோய் வெளியில்விட்டு ஐந்தாறு விசை அடித்தார்கள். அடித்ததும் அவன் இனிமேல் நான் குடிப்பதும் இல்லை; களவெடுப்பதும் இல்லை என்று சொன்னான். பொலிஸ்மாரும் அவ்வளவில் விட்டுவிட்டனர். இப்போ அவன் குடிப்பதும் கிடையாது திருடுவதுங் கிடையாது. இப்போ அவன் கூலிவேலை செய்து தன் குடும்பத்திற்கு ஒரு குறையுமின்றி இனிது நடாத்திவந்தான். ஆகையால் பிள்ளைகளே! நீங்கள் ஒருபோதும் குடிக்கப் பழகாதீர்கள். அப்படிப் பழகினால் இராமு அடைந்த கதிதான். தெரியுமே.

கு. ராதாரத்தினம் (195)

## "மடலை வென்ற மலர்"

அரை ரூபா அம்மா தந்ததுதான்; தடல்பிடலாக ஓடி எங்கள் 'மலரை' வாங்கினேன். அதோ! முதற் கண்ணுக்கெட்டியது தாத்தா பாட்டியினது சித்திரப் படங்கள்தான். அதை வரைந்தவர் உண்மையானவோர் சித்திரக்காரன்தான். நல்லது இவைகளெல்லாம் ஒரு 'புறமிருக்க யோசனையானது மூளையிலே நாடகஞ் செய்யத் தொடங்குகிறது. தாத்தா எவ்வளவு காலந்தான் இந்த வடிவில் எங்களுடனே இருக்கப்போகிறார் என்று எண்ணும் போதெல்லாம் விம்மலுடன் அழுகை வருகின்றது. ஒரு போதுங்காணாத புதிய பார்வையாகையினாலே புன்முறுவலுந் தோன்றுகின்றது.

ஓர் குடு குடு ஆசாமி கையிற் பொல்லுடன் ஆடி ஆடி வருகின்றார். அன்னாரது பூச்சுக்கோலத்தினாற் சாடையான நாகரீகர் போற் காணப்பட்டது. அண்டை வந்ததும், "என்ன சமாச்சாரம் தம்பி பத்திரிகையில்" எனவோர் கேள்வியைப் போட்டார். "நல்ல பேஷான படங்களும் விஷயங்களும் பாருங்கள்" என நானும் மலரைக் காட்டினேன். குலுங்கக் குலுங்கச் சிரிக்கிறார்; இதைக் கண்ட எனக்குச் சாடையான கோபம் வந்தது. என்றாலும் பொறுமையுடன் என்ன சொல்லப்போகிறார் என எதிர்பார்த்தேன். பெரியவரும் நான் எண்ணியதற்கு முழுமாறாக "வென்றுவிட்டதடா உங்கள் மலர்; மடல் தோல்விதான்" எனப்பொக்குவாயை ஆட்டிப்புழுகினார். எனக்குண்டான் ஆனந்தத்திற்கு அளவில்லை. "இதுமட்டுமா அப்பால் பாருங்கள்" என்று ஒவ்வொரு விஷயமாகக் காட்டினேன். பிரதானமாக மகிழ்ச்சிக்கடலுட் பெரியவர் சுழியோட்டம் போடுகின்றார்; கடுக்கனை ஆட்டித்தட்டுகின்றார் முதுகிலே. இவ்வளவு 'டிமான்ற்' தாத்தாவுக்கு கிளம்புகிறதேயென நிலத்தில் நில்லாது ஆகாயத்திற் பறந்தேன் நான்.

இதைப்படித்தாலே பரீட்சையில் மாணவர் சித்தியடைந்து விடுவார்கள். அவ்வளவும் கல்விக்கேற்ற விஷயங்கள்; அரும்பெரும் பாக்கள்; விசித்திர படங்கள்; உவாட்சன் போன்ற பெரிய கியாதிபெற்ற மனிதர்தானும் கல்வியைப் பற்றிய தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கின்றனர். உண்மையான நறுமணங் கமழ் மலர்தான். இதைச் சிறாராகிய மதுகரங்கள் பற்றிப் பிடித்தால் மதுவாகிய அறிவு நிதியைப் பெற்று இன்புறும் பெரும் பேற்றை யடைவர். இன்னோரன்ன 'மலர்' வெளியாகுமென நான் கனவிலும் எண்ணியதில்லை" என மூச்சுவிடாது பேசிக்கொட்டினார். இவ்வித பேச்சினின்றும் உண்மையான அறிவாளிதானெனத் தெரிந்துகொண்டேன்.

சரிதான், 'மடல்' ஒன்று வெளியாயிற்றே! அது எப்படியிருந்ததென்று ஒரு குறுக்குக் கேள்வி போட்டேன். "அவையெல்லாம் சொல்ல நீ சிறுபிள்ளை" என்று சொல்லிவிட்டு, பின்னர் 'அதெல்லாம் பொழுதுபோக்குக்குரியது இது உங்களைப்போல் மாணவருக்குரியது' என்று சொன்னார். 'மடலை வென்றது மலர்.'

சே. சிவனடியான் (249)

வாக்காதி யானகன்ம மாயைதமபால் வீண்காலம், போக்காமல் உண்மை பொருந்துநாள் எந்நாளோ.

# இளைஞர் சங்க வாழ்த்து

கண்டி வித்தியாதரிசி
பிரம்ம ஸ்ரீ. தி. சதாசிவஐயரவர்கள் எழுதுவது

அன்பு நிறைந்த ஐய,

தங்கள் சங்கத்து ஆண்டுவிழாவிற்கு வந்து கலந்து கொண்டாடி மகிழும் பாக்கியம் இம்முறை இல்லாது போயிற்று. எனது வாராமையை மன்னிக்குமாறு தங்களை வேண்டுகின்றேன் தமிழுக்கும் தமிழருக்கும் தாங்கள் ஆற்றிவரும் பெருந்தொண்டில் இச் சங்கத்தைக் கூட்டி நிலைபெறச் செய்து வருவதும் ஒரு சிறந்த பகுதியாகும் என்று மதித்துத் தங்கள் முயற்சியைப் பாராட்டுகின்றேன்.

கேடில் புகழீழ கேசரிதன் கேண்மையொடு
கூடும் இளைஞர்சங்கங் குன்றுது—நீடியே
ஆண்டு நிறைவிதுபோ லாண்டுபல நீண்டுபுகழ்
பூண்டு புரிக பணி.

கண்டி,
20-5-39

அன்பன்,
தி. சதாசிவ ஐயர்

வித்தியாதரிசி, ஸ்ரீ. வேதவனம் அவர்களிடமிருந்தும் இளைஞர் சங்கத்துக்கு வாழ்த்துச் செய்தி கிடைத்திருக்கிறது.

# பேரனின் கடிதம்!

தாத்தாவுக்கு ஏழு வயது தொடக்கம் 18 வயது வரையுமுள்ள பேரன் பேத்திகள் கடிதமெழுதுவார்கள். இவர்களில் ஒரு பேரன் இவ்வாரம் எழுதியிருக்கும் கடிதத்தை எல்லோரும் அறிந்துகொள்வதற்காக இங்கே பிரசுரிக்கிறோம். எழுதியவர் பெயரை மாத்திரம் கேட்க வேண்டாம்! தயவுசெய்து சிரிக்கவும் வேண்டாம்.

*என்ட அன்புல் தாத்தா எப்பிடி சுவம் நான் சுவமாய் இநக்கிறேன். நான் இதுக்கு பறது ஆடிக் அடி நான் காயிதம் அனுப்பிறேன். நாலேது என்ட பல்லிக்கூடம் துடங்தது என்ட அன்புல்ல தாத்தா.*

[என் கண்ணே! இத்தனை அன்பாடா?]

## விண்ணப்பப் பத்திரம்

திகதி............................

அன்பார்ந்த தாத்தா!

தயவுசெய்து "ஈழகேசரி இளைஞர் சங்கத்"தில் என்னை ஒரு அங்கத்தவராகப் பதிவு செய்து கொள்ளுங்கள். இத்துடன் 12 சத முத்திரை ஆறுமாத சந்தாப்பணமாக அனுப்பியிருக்கிறேன். [ இந்தியா 2 அணு; மலாயா 16 காசு. ]

பெயர்..................................................................................

பிறந்த திகதி.................மாதம்...................வருடம்.....................

விலாசம்..................................................................................

..................................................................................

பெற்றார், அல்லது உபாத்தியாயர் கையொப்பம் ..........................................................

இந்த விண்ணப்பப் பத்திரத்தை நிரப்பி 'தாத்தா' c/o 'ஈழகேசரி', சுன்னாகம், இலங்கை என்ற விலாசத்துக்கு அனுப்பிவையுங்கள்.

[குறிப்பு: இளைஞர்சங்கத்தில் சேர விரும்புவோர் தமது விண்ணப்பப் பத்திரத்தை அச்சுக் கூபனிலேயே நிரப்பியனுப்பவேண்டும். வேறு காகிதத்தில் எழுதப்படுவன கவனிக்கப்படா. சந்தா புதுப்பிப்பவர்களுக்கு இந் நிபந்தனை கிடையாது]

# ஈழகேசரி இளைஞர் சங்கம்

## செல்வக் குழந்தைகாள்!

சரித்திரத்திலில்லாத பெரிய சங்கதியை நாங்கள் நிறைவேற்றி விட்டோம். இதை நினைக்க எனக்கு இறுமாப்புக் கூட உண்டாகிறது! அன்று மகாநாட்டில் எத்தனை யெத்தனை பேரன் பேத்திகளைக் கண்டேன்! சுற்றிச்சுற்றி நான்கு பக்கமும் நோக்கி ஆவலுடன் தாத்தாவைத் தேடிக் கொண்டிருந்த குழந்தைகளின் முகத்தைப் பார்க்க எனக்கு உண்மையில் வயிற்றெரிச்சலாய்த் தானிருந்தது. 'நான் தான் அந்தக் கிழவன்' என்று சொல்லி விடலாமா என்றுகூட எண்ணினேன்! பின்னர் வேறு காரணங்களை யுத்தேசித்துப் பல்லைக் கடித்துக் கொண்டு ஒரு பக்கத்தி லுட்கார்ந்துகொண்டேன். சில பேரன்களுக்கு என்னைத் தெரிந்துவிட்டது போலத் தெரிகிறது. பரவாயில்லை. ஆனால் ஒரு பேத்தி மாத்திரம் தன்னந்தனியே யுட்கார்ந்திருந்ததைப் பார்த்தேன். இது வட்டுக்கோட்டையிலிருந்து வந்த அமிர்தவல்லி என்று அறிந்து கொண்டேன்.

பேச்சுப்போட்டிக்கு வந்த பேரன்களின் முகவுரைகள்தான் என் மனதை யப்படியே உருக்கிவிட்டன. புகழ் மொழிகளெல்லாம் அடுக்கி, என்னையும் பாட்டியையும் சந்தியிலிழுத்து வைத்துவிட்டார்களே! அப்பாடா, அந்தவேளையில் என்னால் பொறுத்துக் கொண்டிருக்க முடியவில்லை. உணர்ச்சி பொத்துக்கொண்டு வந்தது. (கதைக்குட்கதையாக, உடம்புசுகமில்லாமலிருந்த பாட்டிக்கு இப்போது நல்லசுகமென்று சொல்லிவைக்கிறேன்).

மத்தியானப் போசன விருந்துதான் பலே தமாஷ். என்னுடைய குழந்தைகளெல்லாம் என்முன்னால் உட்கார்ந்து சாப்பிட்டதைப் பார்த்து நான் அளவற்ற மகிழ்ச்சியடைந்தேன். இந்தப் பாக்கியம் பாட்டிக்குக் கிடைக்காமற் போயிற்று.

பேச்சுப் போட்டியிற் பரிசுபெற்ற அந்த 'நாட்டுப் புறத்துப்' பேரனுக்கு என் சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். 'நாவலர்' தங்கப் பதக்கத்தை யடித்துக் கொண்டுபோன சிவானந்தம் போன்று மற்றைய பேரன் பேத்திகளும் ஊக்கங் கொள்வார்களென்று நம்புகின்றேன். இரண்டாம் பரிசாகிய 'இராமநாதன்' வெள்ளிப்பதக்கம் பெற்றவர் வயதில் மிகவும் சிறியவர். 6-ம் தரத்தில் தான் படிப்பவர். மூன்றும் பரிசு நாங்கள் கடைசியாக தீர்மானித்ததொன்று. இது முடிய மற்றைய நான்கு பேச்சாளரும் வெறுங் கையோடு போகக்கூடாதென்பது தலைமை வகித்த சுவாமியவர்களின் விருப்பம். ஆகவே அவர்களுக்கும் ஒவ்வொரு சின்னப்புத்தகம் கொடுக்கப்பட்டது.

எழுத்துப்போட்டியென்று ஒன்று நாங்கள் நடத்தவில்லை. ஆனால் இத்வரைகாலமும் கல்வி அனுபந்தங்களில் கட்டுரை எழுதி வந்தவர்களில் திறமையுள்ள இருவருக்குப் புத்தகப்பரிசுகள் வழங்கினோம். அடுத்த வருடம் இதைவிடக் கூடிய பெறுமதியான பரிசுகள் கொடுக்க எண்ணியிருக்கிறோம்.

சென்ற ஆண்டு தமிழ் சிரேஷ்ட, கனிஷ்ட பாடசாலைத் தராதர பத்திர பரீட்சையில் கூடிய சித்தி பெற்ற பாடசாலை உடுவில் பெண் துவிபாஷா பாடசாலையெனக் கண்டதால் அவர்களை யழைப்பித்து ஒரு வெள்ளிக்கிண்ணம் பரிசாக வழங்கப்பட்டது. இதில் ஒரு வார்த்தை: பாடசாலை எதுவெனத் தெரிவதில் நாங்கள் மிகுந்த சிரமம் எடுத்தோம். அதாவது சாதாரணமாக விகித வாரியாகத் தெரிவதானால் ஒருவர் எடுத்து அவர் சித்தி யெய்துவதும், 6 பேர் எடுத்து ஆறுவரும் சித்தி யெய்தியதும் போன்ற பாடசாலைகள் பலவுண்டு. இப்படி 100— 100 சித்தியானவைகளைக் கவனித்தல் நியாயமாகாது. ஆகவே நாங்கள் ஒரு குறித்த தொகைக்குமேல் சித்தி யெய்திய பாடசாலைகளைத் தெரிந்து அவற்றில் நூற்று விகிதம் நோக்கினோம். இதன்படி 5 பாடசாலைகளைப் பொறுக்கி அவர்களிடம் எத்தனை பிள்ளைகளை அனுப்பினீர்களென்றும் எத்தனை சித்தி யென்றும் கேட்டிருந்தோம். இவர்களில் எமக்குப் பதில் தெரிவித்தவர்கள் கொழும்புத்துறைச் சாதனபாடசாலையும், உடுவில் பெண்கள் துவிபாஷா பாடசாலையுமாகும். இவர்களுக்கு எமது நன்றியுரித்தாகுக. இவர்களில் உடுவில் பாடசாலையில் S. S. C. யில் 14 க்கு 11 பேரும், J.S.C. யில் 12 க்கு 11 பேரும் (இவர்களில் 7 முதற்பிரிவில்!) சித்தி யெய்தியிருந்தபடியால் இப்பாடசாலைக்கே வெள்ளிக்கிண்ணம் உரித்தாயது. மற்றைய மூன்று பாடசாலைத் தலைமை யாசிரியரும் தமக்குக் கிடைக்கும் கடிதங்களுக்குப் பதில் தெரிவிக்கும் மரியாதைப் பழக்கமில்லாதவர்களாயிருக்கலாம்; அல்லது வெள்ளிக்கிண்ணத்தில் விருப்பில்லாதவர்களாயிருக்கலாம்! இப்பாடசாலைகள் பெயரைக் கூறாது விடுகிறேன்.

சரி, எப்படியோ மகாநாடு நடந்தேறியது. எல்லாம் சந்தோஷமாக முடிந்தது. அடுத்த வருஷம் இதைவிட விசேஷமாய் நடத்தவேண்டுமென்று விருப்பம். அது உங்களில் தான் தங்கியிருக்கிறது. அந்த மகாநாட்டை நடப்பிக்க உங்களையே விட்டுவிடுவேன்!

மகாநாட்டுக்கு வாழ்த்துச் செய்தியனுப்பிய அன்பர்களுக்கும், சங்கீதக் கச்சேரி ஒழுங்குபடுத்தித் தந்த ஆசிரியர் ஸ்ரீ செல்லத்துரைக்கும், ஸ்ரீமதி மகேஸ்வரிதேவியாருக்கும், மற்றும் நண்பர் பலருக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். மகாநாட்டில் தலைமை வகித்த சுவாமியவர்களுக்கும், பிரசங்கங்கள்செய்தபண்டிதர்களிருவருக்கும்நீங்களெல்லாருமாக ஒரு பெரிய கும்பிடுபோடுங்கள் பார்க்கலாம்!

தாத்தா

[குறிப்பு:—இளைஞர் மகாநாட்டில் நடந்த பேச்சுப்போட்டி, பரிசளிப்பு முதலியவற்றைப்பற்றி நியாய விசாரணைகள் செய்தெழுதப்படும் கடிதங்கள் கவனிக்கப்படா. இதனால் வீணான சிரமமுண்டாகையாலும் எல்லோர்க்கும் விடைகொடுத்துக்கொண்டிருத்தல் கஷ்டமாகையாலும் இந்த அறிவித்தலைச் செய்யவேண்டியிருக்கிறது.]

### தாத்தாவின் பதில்

சே. சிவனடியான் (249) தம்பி, உமதன்புக்கக மகிழ்கின்றேன். உம்மைப்பற்றி நான் தற்செயலாக ஒரு ஆசிரியரிடமிருந் தறிய நேர்ந்தது. நல்ல வேளையாக அந்த மனு

(தொடர்ச்சி 237-ம் பக்கம் பார்க்க)

யாழ்ப்பாணம்-மயிலிட்டி தெற்கு "திருமகள்நிலைய"த்தி லிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னாகம் 'தலையாட்டியி' லுள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1939-ம் ஹு மே மீ 28உ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.